**சாராம்சம்:** இனிய குழந்தைகளே, தந்தையின் உருவம் ஒரு புள்ளியாகும். அவரைச் சரியாக அடையாளம் கண்டு, நினைவு செய்வதே விவேகமுள்ளவராக இருப்பதாகும்.

**கேள்வி:** நாம் ஒரு கனவை, ஓர் எல்லையற்ற கோணத்தில் பார்க்கும்; போது, அதன் அர்த்தம் என்ன? ஏன் இவ்வுலகம் ஒரு கனவைப் போன்றது என்று கூறப்படுகிறது.?

**பதில்:** கனவு என்பது கடந்து சென்றுவிட்ட ஒன்றாகும். இந்த முழு உலகமுமே ஒரு கனவைப் போன்றது என்பதை, அதாவது, சத்தியயுகத்திலிருந்து கலியுகம் வரை அனைத்துமே கடந்து சென்றுவிட்டது என்பதும், இப்போது நீங்கள் ஒரு விநாடியில் கனவுலகைப் பற்றிய விழிப்புணர்வுடையவர்களாக ஆகியிருக்கிறீர்கள் என்பதும் இப்பொழுது உங்களுக்குத் தெரியும். உலகின் ஆரம்பம், மத்தி, இறுதியைப் பற்றியும், அசரீரி உலகம், சூட்சுமலோகம், சரீர உலகம் என்பனவற்றைப் பற்றியும் தெரிந்து கொண்டதன் மூலம் நீங்கள் மாஸ்டர் கடவுள் ஆகியிருக்கிறீர்கள்.

**பாடல்:** காற்சலங்கையொலியுடன் என் வாசல் தேடி வந்தது யாரோ?...

ஓம் சாந்தி. சிவபாபா தன் இனிமையிலும் இனிமையான குழந்தைகளான, எப்பொழுதோ தொலைந்து இப்பொழுது கண்டெடுக்கப்பட்டிருக்கும் சாலிக்கிராம்களுக்கு இங்கு அமர்ந்திருந்து விளங்கப்படுத்துகிறார். சாலிக்கிராம்களே சிவபாபாவின் குழந்தைகளாவர். எவரும் சிறிதளவேனும் அறிந்திராத ஒருவரே உங்களுக்குக் கற்பிக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். மக்கள் சிவனின் ஆலயங்களிற்குச் சென்று, மிகப் பெரிய இலிங்க வடிவத்தை அங்கே காண்கிறார்கள். தமது பாபா ஒரு புள்ளி என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. சிவபாபாவை மிகப் பெரிய உருவத்தில் நினைவு செய்கின்ற அல்லது நினைவு செய்யக் கூடிய குழந்தைகள் எதுவும் அறியாதவர்கள், ஏனெனில், அவ்வாறு நினைவு செய்வது பிழையாகும். தந்தை விளங்கப்படுத்துகிறார்: 'நான் ஒரு புள்ளி." எவராலும், ஒரு புள்ளியை எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்? அவர் சதா ஒளி வடிவானவர் என்றும், அவர் இன்னார் என்றும் சிலர் கூறினாலும், அது அவ்வாறன்று. அவர் ஒரு புள்ளியாவார். அவரை நினைவு செய்வது மிகவும் சிரமமாகும். அவர்கள் மீண்டும் மீண்டும் அவரை மறந்து விடுகிறார்கள். பக்தி மார்க்கத்தில் அவர்கள் சிவலிங்கத்திற்கு மலர்களை அர்ச்சித்து வழிபடும் வழக்கத்தைக் கொண்டிருப்பதனால் அதனை நினைவு செய்கிறார்கள். எவ்வாறாயினும், தமது பாபா புள்ளி வடிவானவர் என்பதை அவர்கள் மீண்டும் மீண்டும் மறந்து விடுகிறார்கள். முழு நாடகத்திலும் அவருக்கு என்ன பாகம் இருக்கின்றதோ அதை அவர் நடிக்கிறார். அவர்கள் அமர்ந்திருந்து, அவரே சந்தோஷக் கடல், அவரே அமைதிக்கடல் என்று ஒரு புள்ளியைப் புகழ்வார்களா? அவர் மிகவும் சின்னஞ்சிறியதொரு புள்ளியாவார். யாரை எங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று குழந்தைகள் கேட்கிறார்கள். விவேகமுள்ள குழந்தைகளால் மாத்திரமே இதனைப் புரிந்துகொள்ள முடியும். இல்லாவிட்டால், அவர்கள் சிவனுடைய இலிங்க ரூபத்தையே நினைவு செய்வார்கள். அவர்களுடைய புத்தியில் கிருஷ்ணரை மிக நன்றாக வைத்திருக்க முடியும். ஆனால் இவரோ ஒரு புள்ளி வடிவானவர். அவரை நினைவு செய்ய முயற்சிக்கும் பொழுதும் நினைவு செய்ய முடியாதுள்ளது என்று பாடலில் கூறப்பட்டுள்ளதால் அவரது முகம் எவ்வாறு இருக்கும்? இது மிகவும் அற்புதமானதாகும். அவர் மிகவும் சிறியதொரு புள்ளி வடிவமானவர். அவர் ஞான நடனமாடுகிறார். இது கனவுகளின் உலகம் எனப்படுகிறது. கடந்து சென்று விட்டவை அனைத்துமே கனவு எனப்படுகிறது. ஒரு கனவு போன்றதொரு உலகம், கடந்தவையெல்லாம் உங்கள் புத்தியில் தோன்றுகிறது. பிரம்மாந்தம், அசரீரி உலகம், சூட்சுமலோகம், சத்தியயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் போன்றவை அனைத்துமே முற்றிலும் ஒரு கனவாகப் போய் விட்டது. கடந்தவை அனைத்துமே கனவாகிறது. இப்போது கலியுக இறுதியாகவும் உள்ளது. இவ்வுலகம் ஒரு கனவைப் போன்றதாகும். நீங்கள் காணும் அந்தக் கனவுகள் எல்லைக்குட்பட்டவையாகும். எல்லையற்றவை உங்கள் புத்தியிலே தோன்றுகிறது. சூரிய, சந்திர வம்சங்களும் ஒரு கனவாகிப் போயுள்ளன. இது கனவுலகம் எனப்படுகிறது. குழந்தைகளாகிய உங்களைத் தவிர வேறெவருக்கும் இந்த இரகசியங்கள் தெரியாது. சத்தியயுகத்தில் அளவற்ற சந்தோஷம் இருந்தது. அவை அனைத்தும் கடந்த காலமாகி விட்டது. குழந்தைகளாகிய உங்களுடைய புத்தியில்

இப்பொழுது ஆரம்பம், மத்தி, இறுதியின் முழு ஞானமும் உள்ளது. ஒரேயொரு தந்தையின் நினைவு மாத்திரமே இருக்க வேண்டும். தந்தை விளங்கப்படுத்துவனவற்றை வேறு எவராலும் விளங்கப்படுத்த முடியாது. கனவுகளின் உலகம் உங்கள் புத்தியில் உள்ளது. கடந்த காலமாகி விட்ட அனைத்தைப் பற்றியும் உங்கள் புத்திக்குத் தெரியும். ஆரம்பத்திலிருந்து இறுதி வரை, அடியிலிருந்து நுனி வரை சகல ஞானத்தையும் நீங்கள் உங்கள் புத்தியில் வைத்திருக்கிறீர்கள். இப்போது நீங்கள் திரிகாலதரிசிகளாகவும் திரிலோகநாதர்களாகவும் ஆகியிருக்கிறீர்கள். திரிலோகநாதர் ஆகுவது நீங்கள் கடவுளாகி விட்டதைப் போன்றதாகும். கடவுள் இங்கு அமர்ந்திருந்து உங்களுக்குக் கற்பித்தல்களைக் கொடுக்கிறார். உங்களுக்கு ஒரு விநாடியில் கனவு தோன்றுகிறது. ஆகவே ஒரு விநாடியில் நீங்கள் விருட்சத்தையும், விதையையும்; நினைவு செய்யவேண்டும். பாபாவும் கூறுகிறார்: ஆதி, மத்தி, அந்தத்தின் ஞானம் என்னிடம் உள்ளது. இதனாலேயே நான் ஞானக் கடல்;, ஞானம் நிறைந்தவர், ஜனிஜனன்ஹார் (உள்ளேயிருக்கும் இரகசியங்கள் எல்லாம் அறிந்தவர்) என்று அழைக்கப்படுகிறேன். ஒவ்வொருவருடைய ஸ்திதியும் எத்தகையதாக இருக்கும் என்பது அவருக்குத் தெரியும். நான் ஏன் அமர்ந்திருந்து ஒவ்வொருவருடைய ஸ்திதியையும் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறேன்? சென்ற கல்பத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் எத்தகைய ஸ்திதியில் இருந்தீர்களோ அந்த ஸ்திதியிலேயே இப்போது இருக்கிறீர்கள். உங்களுக்கும் அது தெரியும். முயற்சி செய்வதற்கு உங்களைத் தூண்டுவதற்காக 'மிக நன்றாக முயற்சி செய்யுங்கள்." என்று அவர் கூறுகிறார். இப்பொழுது நீங்கள் சுயதரிசனச் சக்கரதாரிகளாக வேண்டும். கடந்த காலமாகி விட்ட அனைத்தைப் பற்றியும் உங்களுக்குத் தெரியும். தேவதேவியர் இவ்வாறு ஆட்சி புரிந்தார்கள். அவர்கள் மீண்டும் வந்து ஆட்சி புரிவார்கள். நீங்கள் தொடர்ந்தும் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பனவற்றை நினைவு செய்வீர்கள். இதுவே சுயதரிசன சக்கரம் எனப்படுகிறது. சிவலிங்க ரூபத்தை நினைவு செய்வது மக்களுக்கு வழக்கமாகிவிட்டது. அதனால், பாபா ஒரு ஜோதிர்லிங்கம் (கோள-வடிவான ஒளி ரூபம்) என்று அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். நீங்கள் அவரை ஒரு புள்ளி என்று அழைத்தீர்களாயின் மக்கள் குழப்பம் அடைவார்கள். அவர்கள் ஆத்மா உருவத்தில் சிறியவர் என்றும், பரமாத்மா பெரியவர் என்றும் நம்புகிறார்கள். தற்போது இக்கலியுக உலகத்தில் அளவற்ற பகட்டும் ஆடம்பரமும் உள்ளதென்பது குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். இதுவே மாயையின் பகட்டும் ஆடம்பரமும் எனப்படுகின்றது, இது மாயையின் பகட்டாகும். உலகம் இப்போது மிகவும் நன்றாக உள்ளது என்று அவர்கள் கூறுகிறார்கள். இப்போது பிரம்மாண்டமான மாளிகைகள் உள்ளன. அமெரிக்காவிலே அளவற்ற பகட்டும் ஆடம்பரமும் காணப்படுகிறது. அழகான, பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இவையனைத்தும் மூலாம் பூசப்பட்டவை என்றும், அனைத்தும் விரைவில் அழிக்கப்படும் என்றும் நாம் புரிந்து கொள்கிறோம். இது முற்றிலும் புதியதோர் உலகம் என்பது போல, அவர்கள் நாளுக்கு நாள் மிக உயரமான கட்டடங்கள், அணைக்கட்டுகள் என்பனவற்றைக் கட்டு;கிறார்கள். மக்கள் மாயையின் ஆதிக்கத்திற்குள் இருக்கிறார்கள். இது அசுர சமுதாயத்தின் பகட்டும் ஆடம்பரமும் ஆகும். அவையனைத்துமே மாயாஜாலமாகும். அவை விரைவில் மறைந்து விடும். அவையனைத்துமே அழிக்கப்பட்டு விடும் என்பது விஞ்ஞானத்தின் அகங்காரத்தைக் கொண்ட மாபெரும் விஞ்ஞானிகளின் புத்தியில் உள்ளது. அவர்கள் ஒருவருக்கொருவர், 'தலையிடாதீர்கள்!' என்று கூறுகிறார்கள். இல்லாவிட்டால், எல்லாமே அழிந்து போய் விடும். அமெரிக்கா தன்னைச் சக்தி வாய்ந்தாகக் கருதிக் கொள்வதால், நிச்சயமாக, பின்னர் அதனை எதிர்க்க வல்ல இன்னொருவர், இரண்டாவதாக நிற்பார். இரு பூனைகள் சண்டையிட்டதாக நினைவுகூரப்படுகிறது. யாதவர்கள் தமது சொந்தக் குலத்தையே அழித்துக் கொண்டார்கள். எனவே, அவர்களே அந்த இரு பூனைகளாவர். இப்போது அது நடைமுறையில் இடம்பெறுகிறது. சென்ற கல்பத்திலும் இத்தருணத்தில் குழந்தைகளாகிய நீங்கள் இந்த ஞானத்தைப் பெற்றுக் கொண்டீர்கள் என்று உங்களுக்குத் தெரியும். இப்போது நீங்கள் மீண்டும் அதனைப் பெறுகிறீர்கள். தந்தை வந்து, ஞானம் முழுவதையும் விளங்கப்படுத்துகிறார். தந்தையின் புத்தியில் அது இருப்பதைப் போலவே, குழந்தைகளாகிய உங்கள் புத்தியிலும் அது உள்ளது. புள்ளியாக இருப்பவர் சிவன் எனப்படுகிறார். முழுப் பாகமுமே ஆத்மாவுக்குள்ளே பதியப்பட்டுள்ளது. சத்திய யுகத்திலிருந்து கலியுகம் வரை உங்களுக்கு சகல துறைகளையும் கொண்ட பாகம் ஒன்றுள்ளது. சத்திய, திரேதா யுகங்களில் நீங்கள் சந்தோஷத்தை அனுபவம் செய்யும் போது, தந்தைக்குப் பாகம் எதுவும் இருக்கமாட்டாது. தந்தை கூறுகிறார்: என்னை விட நீங்கள் பெரியதொரு பாகமுடையவர்கள். நீங்கள் சந்தோஷ உலகில் வாழும் பொழுது, நான்

நிர்வாணாவில் இருப்பேன். அச்சமயத்தில் எனக்கு எவ்விதப் பாகமும் இருக்கமாட்டாது. நீங்கள் ஒரு சகலதுறைப் பாகத்தையும் நடித்திருப்பதால், களைத்துவிட்டீர்கள். இதனாலேயே கடவுள் உங்கள் பாதங்களை உருவி (மசாஜ்) விட்டதாகக் எழுதப்பட்டுள்ளது. தந்தை கூறுகிறார்: குழந்தைகளே, நீங்கள் களைப்படைந்திருப்பீர்கள். அரைக் கல்பமாக நீங்கள் பக்தி செய்து, வாசல்தோறும் அலைந்து திரிந்தீர்கள். பக்தி மார்க்கத்தில் அலைந்து திரிந்து களைத்துப் போய் விட்டீர்கள் என்பதால், தந்தை வந்து பூஜிப்பவர்களாகிய உங்களைப் பூஜிக்கத் தகுந்தவர்களாக ஆக்குவதன் மூலம் பிரதிபலனை அளிக்கிறார். நீங்கள் பூஜிக்கத் தகுந்தவர்களாக இருந்தீர்கள் என்றும் இப்போது பூஜிப்பவர்களாக ஆகியுள்ளீர்கள் என்றும் உங்களுக்குத் தெரியும். கடவுள் பூஜிக்கத் தகுந்தவராக இருந்து பூஜிப்பவராக ஆகுவதில்லை. இல்லை, நாமே அவ்வாறு ஆகுகிறோம். பாரதம் அழிவற்ற பூமி என்று நினைவுகூரப்படுகிறது. பாரதமே சிவனுடைய பிறப்பிடமாகும். மக்கள் தமது பிறந்த இடத்திற்காகத் தம்மை அர்ப்பணிக்கிறார்கள். தமது தாயகத்தை மீட்டெடுப்பதற்காகக் காங்கிரஸ் கட்சி எவ்வளவு பாடுபடுகிறது என்று பாருங்கள். அந்நியரை அவர்கள் விரட்டினார்கள். இப்பிறப்பிடம் சுவர்க்கமாக இருந்தது. பின்னர், ஐந்து விகாரங்களாகிய மாயை வந்து அதனை விழுங்கி விட்டாள். நாம் இராவணனை ஒரு மாபெரும் பகைவனாகக் கருதுகிறோம். நமது இராச்சியத்தை உட்கொண்டு விட்ட மாயையான இராவணனே அனைவரதும் மாபெரும் பகைவனாவான் என்பதை எவரும் புரிந்து கொள்வதில்லை. எவரும் அறிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக, ஓர் சுண்டெலியைப் போல் மறைமுகமாக ஊதிய பின்னரே அவள் கடிப்பாள். இவ்வாறு கடித்ததன் மூலம் அவள் உங்களை எதற்குமே வழியில்லாதவர்கள் ஆக்கி விட்டாள். உங்கள் இராச்சிய பாக்கியத்தை அவள் அபகரித்ததைப் பற்றி எவருக்கும் தெரியாது. தமது பகைவன் யாரென்றோ அல்லது தாம் எவ்வாறு வறுமையால் பீடிக்கப்பட்டவர்களாகினார்கள் என்றோ எவருக்கும் தெரியாது. மாயை ஒரு பெருச்சாளி. அரைக் கல்பமாக அவள் உங்களைக் கடித்து, பாரதத்தை ஒரு சிப்பியைப் போலப் பெறுமதியற்றதாக்கி விட்டாள். அவள் மிகவும் சக்தி வாய்ந்தவள். இப்போது நீங்கள் அமைதியாக அவளை வெற்றி கொள்;கிறீர்கள். எவ்வாறு மறைமுகமாக உங்கள் இராச்சியத்தை நீங்கள் மீண்டும் பெற்றுக் கொள்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எவ்வாறு மறைமுகமாக அதனை இழந்தீர்களோ, அதேபோல மறைமுகமாகவே அதனை மீண்டும் பெறுகிறீர்கள். எவருக்கும் இது தெரியாதாயினும், இப்போது நீங்கள் அவளை வெற்றிகொள்ள வேண்டும். இது மிகவும் ஆழமானதோர் இரகசியமாகும். நாங்கள் மீண்டும் ஒருமுறை பாபாவின் உதவியுடன், நமது இராச்சிய பாக்கியத்தைப் பெறுகிறோம். நாம் நமது கரங்களையோ பாதங்களையோ பயன்படுத்துவதில்லை. நாங்கள் எல்லையற்ற தந்தையிடமிருந்து மறைமுகமாக எமது ஆஸ்தியைப் பெற்றுக் கொள்வதுடன், அது அரைச்சக்கரத்திற்குத் தொடரப் போகிறது. எலியாகிய மாயை மிக மெதுவாகவே கடிக்கிறாள். நீங்களோ ஒரே தடவையில் 21 பிறவிகளுக்கு ஓர் இராச்சியத்தைப் பெற்றுக் கொள்கிறீர்கள். 84 பிறவிகளின் இரகசியமும் உங்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் இவ்வாறு பல பிறவிகள் எடுத்தீர்கள். சத்தியயுகத்தில் உங்கள் ஆயுட்காலம் மிக நீண்டதாக இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். பின்னர், நீங்கள் தூய்மையற்றவராகிப் புலனின்பங்களில் மூழ்கும் போது, துவாபர, கலியுகங்களில் 63 பிறவிகள் எடுக்கிறீர்கள். பாபா இங்கிருந்து இதனை விளங்கப்படுத்துகிறார். இவ்வாறு ஒவ்வொரு கல்பத்திலும் மாயை நமது இராச்சியத்தைப் பறித்துக் கொள்ள, பின்பு மீண்டும் அவளிடம் இருந்து அதனை நாங்கள் பெற்றுக் கொள்கிறோம். எந்த நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்கள், எந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று பாடலில் பாடப்படுகிறது. எவ்வாறாயினும், மக்கள் இதனைப் புரிந்து கொள்வதில்லை. ஆத்மாக்களாகிய நீங்கள் எந்த உலகத்திலிருந்து வந்திருக்கிறீர்கள் என்றும், ஏன் வந்திருக்கிறீர்கள் என்றும் உங்களுக்குத் தெரியும். முழுச் சக்கரமும் உங்கள் புத்தியில் உள்ளது. முழு நாடகத்திலும் சிவபாபாவிற்குக் கதாநாயக-கதாநாயகிப் பாகம் உள்ளது. சிவபாபாவுடன் சேர்ந்து நடிக்கும் நடிகர்கள் யார்? முதலில் அவர் பிரம்மா, விஷ்ணு, சங்கரருக்கும் பின்னர் குழந்தைகளாகிய உங்களுக்கும் பிறப்புக் கொடுக்கிறார். நீங்கள் தந்தையின் உதவியாளர்களே. தந்தை தன் பாகத்தை நடித்து விட்டுத் தன் உலகத்திற்குத் திரும்பிச் செல்வதுடன், தன் உதவியாளர்களாகிய உங்களையும் தன்னுடன் முக்தி தாமத்திற்கு அழைத்துச் செல்கிறார். நீங்கள் முக்தி தாமத்திற்குச் சென்று, பின்னர், ஜீவன்முக்தி தாமத்திற்குச் செல்வீர்கள். இதனை மிகத் தெளிவாக உங்கள் புத்தியில் வைத்திருக்க வேண்டும். எனவே,

கடந்த காலமாகி விட்ட கனவுகளின் உலகம் இதுவாகும். சத்திய, திரேதா யுகங்களில் தேவர்கள் வாழ்ந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இப்போது அவர்கள் இல்லை. பாடலுக்கு மிக ஆழமானதோர் அர்த்தம் உள்ளது: கனவுகளின் உலகத்தை உங்களது புத்தியில் வைத்துக் கொண்டு எவ்வாறு அமர்ந்திருக்கிறீர்கள்? உலகச் சக்கரம் எவ்வாறு சுழல்கிறது? பாபாவுக்குள்ள ஞானம் எம்மிடமும் உள்ளது. எல்லையற்ற தந்தையிடமே இந்த எல்லையற்ற ஞானம் அனைத்தும் உள்ளது. இதுவுமே ஒரு கனவாகி விடும் என்று குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். இது புரிந்து கொள்ள வேண்டியதும், விளங்கப்படுத்தப்பட வேண்டியதும் ஆகும்;. சத்திய, திரேதா யுகங்களில் எவருடைய புத்தியிலும் இவை இருக்க மாட்டாது. தொடர்ந்தும் ஆழமான கருத்துக்களை நீங்கள் பெற்றுக் கொள்;கிறீர்கள். முழுச் சக்கரமும் உங்கள் புத்தியிலிருக்க வேண்டும். பக்தி மார்க்கம் என்பது என்ன, அது எப்போது ஆரம்பமாகுகிறது? அதன் மூலம் எவ்வித நன்மையும் பெறப்படவில்லை. பக்தி செய்வதன் மூலம் மக்களுக்கு இழப்பே ஏற்பட்டிருக்கிறது. இப்போது நீங்கள் சிப்பியிலிருந்து வைரத்தைப் போன்றவர்கள் ஆகுகின்றீர்கள். மாயை உங்களைச் சிப்பியைப் போன்றுப் பெறுமதியற்றவர்கள் ஆக்குகின்றாள். பாபா உங்களுக்கு ஞான நடனத்தைக் கற்பிக்கின்றார். பின்பு, நீங்கள் அங்கே சென்று நடனமாடுவீர்கள். இவை, அறிந்து கொள்ளவேண்டிய பெறுமதி வாய்ந்த, மிக அற்புதமான விடயங்களாகும். இங்குள்ள சம்பிரதாயங்கள் எதுவுமே அங்கிருக்க மாட்டாது. அது விகாரங்களற்ற உலகமாகும். அங்கே மாயையின் பெயரோ, சுவடோ எதுவும் இருக்காது. எல்லாவற்றுக்கும் முதல் பாபாவை நினைவு செய்து உங்கள் ஆஸ்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவ்வாறாயினும், அங்குள்ள சம்பிரதாயங்கள் எதுவாக இருப்பினும், அவை அங்கே தொடரும். அங்கேயுள்ள சம்பிரதாயங்கள் அனைத்தும் புதியனவாக இருக்கும். இவ்விழாக்கள் எதுவும் அங்கே இருக்க மாட்டாது. இங்கே சந்தோஷமின்மை இருப்பதனாலேயே அவர்கள் விழாக்களைக் கொண்டாடுகிறார்கள். அங்கே ஒவ்வொரு நாளும் ஒரு கொண்டாட்டமாகவே இருக்கும். அங்கு அழவேண்டிய அவசியமே இருக்காது. விழாக் கொண்டாடுவது என்ற கேள்விக்கே இடமில்லை. நமக்கு ஒவ்வொரு நாளும் பெருநாளாகவே இருக்கும். அங்கு திருமணங்களும் பெரும் ஆடம்பரமாகவே இடம்பெறும். மணப்பெண்ணுக்கு ஒரு சீதனம் கிடைக்கும். அவளுக்குப் பணிப்பெண்களும் சேவகர்களும் கூடக் கிடைப்பார்கள். எவ்வாறாயினும், விழாக்கள் போன்ற எதற்குமே அவசியம் இருக்காது. இவையே பக்தி மார்க்கத்தில் கொண்டாடப்படுகின்ற சங்கமயுக விழாக்களாகும். அங்கேயோ எப்போதும் சந்தோஷமே இருக்கும். அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டெடுக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

**தாரணைக்கான சாராம்சம்:**

1. சுயதரிசன சக்கரத்தைச் சுழற்றி, மறைமுகமாக மாயையை வெற்றி கொள்ளுங்கள். தந்தையைப் போல ஞானம் நிறைந்தவராகுங்கள்.
2. தந்தையை அவர் எவ்வாறானவரோ, அவர் என்ன செய்கின்றாரோ அவ்வாறாகவே மிகச்சரியாக அறிந்து, புள்ளி வடிவில் அவரை நினைவு செய்யுங்கள். புள்ளியாகி, புள்ளியாகிய தந்தையின் நினைவில் நிலைத்திருங்;கள். எதுவும் அறியாதவர்களாக இருக்காதீர்கள்.

**ஆசீர்வாதம்:** உங்கள் சிறப்பியல்புகள் அனைத்தையும் பயன்படுத்துவதன் மூலம் அவற்றை அதிகரித்து வெற்றி சொரூபம் ஆகுவீர்களாக.

உங்கள் மனதினால், வார்த்தைகளினால், செயல்களினால் உங்கள் சிறப்பியல்புகளை எந்தளவிற்கு அதிகமாக பயன்படுத்துகின்றீர்களோ அந்தளவிற்கு அச் சிறப்பியல்புகள் தொடர்ந்தும் அதிகரிக்கும். இவற்றை நீங்கள் சேவைக்காக பயன்படுத்துவது என்;;;;;;;;றால் ஒரு விதையிலிருந்து அதிகளவு பழங்களைப் பெற்றுக் கொள்வது என்று அர்த்தமாகும். இந்த மேன்மையான வாழ்வில் உங்கள் பிறப்புரிமையாக நீங்கள் பெற்றுள்ள சிறப்பியல்புகள் அனைத்தையும் விதை வடிவில் வெறுமனே வைத்திருக்காது, அவற்றை சேவை களத்தில் விதைத்தால் நீங்கள் அவற்றின் பலனை அனுபவம் செய்வீர்கள். அதாவது, நீங்கள் வெற்றி

சொரூபமாக உங்களை அனுபவம் செய்வார்கள்.

**சுலோகம்:** விரிவாக்கத்தைப் பார்க்காதீர்கள், ஆனால் சாராம்சத்தைப் பார்த்து, அதனை உங்களுக்குள் அமிழ்த்திக் கொள்ளுங்கள், இதுவே தீவிர முயற்சியாகும்.

**---ஓம் சாந்தி---**

---------ஓம் சாந்தி-----------